Regd. No. M. 873.

985

தொகுதி 12. * பகுதி 7, 8

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை,
நாகரீகம் இவைகளைப் பரவச் செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

துர்மதி ௵ கார்த்திகை—மார்கழி ௴
1921 ௵ நவம்பர்—டிசம்பர்

12 JUN 1923

விஷயங்கள்.

1. அறிவிப்பு 145
2. தற்கால நிலைமை 147
3. ஸர். டி. சதாசிவய்யர் அவர்கள் சிறப்புக் கவி 153
4. ஸ்ரீ ஜினராஜதாஸர் நிருபணம் 155
5. தயாநந்தேசர் சரித்திரம் 160
6. ஸ்நேகலதாதேவியின் விதிதம் 1
7. புஸ்தக விமர்சம் 166, 1
8. ஊருடன் கூடிவாழ் 16
9. மனப்பண்புகளின் சேர்க்கை 170
10 பத்திரிகை விமர்சம் 18

அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்

தபால் சார்ஜ் உட்பட வருஷசந்தா இந்தியாவுக்கு 2—0—0
அன்னிய நாடுகளுக்கு ரூ. 2—8—0 தனிப்பிரதி அணா 4

மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

1922

2495

படங்களுடன் கூடிய கதைகள்.

சதிர்லாபம்—அல்லது நட்பின் மேன்மை 0—2—0
சிவாஜிமஹாராஜ் } ஆர். எஸ். நாராயணசாமி 0—2—0
குமணராஜன் — } ஐயர் பி. ஏ. பி. எல். 0—2—0

அரிய ஞானக் களஞ்சியங்கள்.

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை	மகாலயபக்ஷமும் நவராத்திரியும்
லோககுருவின் அவதாரங்கள்	ஸ்ரீ தேவாபி மருகுருநாதர்
ஹிந்து என்பவன் எவன்	தசாவதாரங்களின் உண்மை
காயத்திரி	வண்ணங்களின் ரகசியம்
காயத்திரி ராமாயணம்	திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.
சகோதரத்வம்	லோககுருவாகிய பரமன் வருவானேல்

நம் குழந்தைகளும் நம்தேசத்துக்கு வருங்கால மகிமையும்.
டில்லிமாநகரில சக்ரவர்த்தியவர்களின் பட்டாபிஷேகம்.

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் இரண்டணா.

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
பொரவியால் உள்ள பிரயோஜனங்கள்
சமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை
ளபயம் வேண்டாம். சன்மார்க்கதீபம்
ரு பாதங்களில். சந்தியா வந்தனம்

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் மூன்றணா.

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளகூடாது:
(2) ஸ்தூல பிரபஞ்ச தர்மங்கள்—ஆத்ம தர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் துரவஸ்தை
(7) கர்மநாசம் (8) சின்னங்கள் (9) கர்மம்

(10) குழந்தைகளை பழக்கும் முறையில் ஜாக்கிரதை பெற்றிருக்க வேண்டிய சுருக்கமான விஷயங்கள்.

தபால் சார்ஜ் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்
மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 12 } தர்மதிஹு கார்த்திகை-மார்கழி மீ { பகுதி 7, 8,
1921ஹு நவம்பர்—டிசம்பர்மீ

அறிவிப்பு:

1921ஹு டிசம்பர்மீ கடைசியில் காசியில் நடந்த பிரஹ்மஞான சபைக் கன்வென்ஷனில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிகழ்ந்தன.

1. 1922ஹு ஜனவரிமீ ஆரம்ப முதல் பிரஹ்மஞான சபையில் அங்கத்தாராகச் சேரவிரும்பும் ஒவ்வொருவரும் பிரவேசக்கட்டணமாக ரூ 5 வீதம் செலுத்தவேண்டும்.

2. கிளைச்சபை அங்கத்தினராயிருக்கும் பிரஹ்மஞான சபை அங்கத்தினர் ஒவ்வொருவரும் செலுத்தவேண்டிய வருஷாந்திரக் கட்டணமானது ரூ 3லிருந்து ரூ 4 ஆகவும், கிளைச்சபையில் சேராத ஷை அங்கத்தினர் ஒவ்வொருவரும் செலுத்தவேண்டிய வருஷாந்திரக் கட்டணமானது 4 ரூபாயிலிருந்து 5 ரூ ஆகவும் உயர்த்தப்பட்டது. இந்த

விதியானது 1922௵ அக்டோபர்௴ 1௳ முதல் ஊர்ஜிதத்துக்கு வரும்.

பூர்ணேந்து நாராயண ஸிம்ஹா.
ஜனரல் செகிரிடெரி, காசி.

அறிவிப்பு.

பிரஹ்மஞான சபையில் இந்திய ஸெக்ஷனுடைய அமைப்பு விதிகளில் 4-வது ஆர்டிகிள் 3, 4, விதிகளின் பிரகாரம், "லாட்ஜுகளுக் குட்படாத அங்கத்தினர்கள்" 1922௵ செப்டம்பர்௴ 30௳ யோடு முடிவாகிற வருஷச் சந்தாவை 1922௵ மார்ச்சு௴ 15௳ க்குள் காசியில் இந்தியன் ஸெக்ஷன் காரியதரிசியிடம் வந்து சேரும்படி யனுப்பாதவர்களுடைய சந்தாவை வசூல் செய்வதற்காக தியாஸபி-இன்-இந்தியாப் பத்திரிகை அல்லது மாற்றப் பத்திரிகையை வி. பி. மூலமாய் அனுப்பப்படும். ஆகையால் மேற்கூறியபடி லாட்ஜுகளுக்குட் படாமல் நேரே இந்தியன் ஸெக்ஷனுக்குட் பட்ட அங்கத்தினர்கள் 15—3—22 க்குள் சந்தாக்களை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

எம். பி. வாக்ளே.
உதவி ஜெனரல் ஸெகிரிடரி

அழைப்பு லிகிதம்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த விராலிமலை யென்ற பிரசித்திபெற்ற சுப்பிரமணிய ஸ்வாமி திவ்ய

க்ஷேத்திரத்தில் வருகிற 1922வரு மார்ச்சிமீ 3 4 5, வ களில் பிரஹ்மஞான சபைக்கான்பரன்ஸ் நடைபெறும். திவான் பகதூர் ஸர். டி. சதாசிவய்யரவர்கள் அக்கிராசனம் வகிக்க இணங்கி யிருக்கிறார்கள். 5வ யன்று மேற்கூறிய சுப்பிரமணிய ஸ்வாமிகோவில் மகாபிஷேகம் நடைபெறும். ஆகையால் பிரஹ்மஞான சபையோர்கள் வந்து சேரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தற்கால நிலைமை.

பிரான்சு தேசத்தில் ஒரு மின்சார சாஸ்திரி புதிதாக ஒரு யந்திரம் கண்டுபிடித்திருக்கின்றனராம். அது மணிக்கட்டில் தரிக்கக்கூடிய வளையல் போன்ற யந்திரமாம். இரண்டு விதமான மின்சாரத்தையும் உண்டுபண்ணக் கூடிய திரவியங்களடங்கிய சிறு கூடுகளையும் அவைகளைப் பிணைத்து சிறு நுண்ணிய கம்பிகளையும் இவ்வளையலில் அமைத்திருக்கின்றனராம். இதனால் உண்டாக்கப்பட்ட மின்சாரமானது தேகத்துக்குள் புகுகின்றதாம். அதனால் நரம்புத் தளர்ச்சியுண்டாகி அதன் பின்னர் அயர்ந்த நித்திரையுண்டாகுமாம். நித்திரையின்மையால் வருந்தி வரும் நோயாளிகளுக்கு இவ்வியந்திரம் மிகவும் உபயோகமுள்ளதாகும்.

***

ஐரோப்பாவின் தெற்கேயிருக்கும் மத்தியதரைக் கடலில் ஸிஸிலித் தீவுக்கு அருகாண்மையில் ஒரு புகைக் கப்பல் பிரயாணிகளை யேற்றிவரும் சமயத்தில் மேகங்களினின்று மின்னற்பந்து போல் ஒரு பிரகாசமான கோளம் கீழே இறங்கி கப்பலின் பாய்மரத்தில் தாக்கி படேல் என்ற சப்தத்துடன் வெடித்ததாம். ஆனால் அக்கப்பலுக்கு யாதொரு கெடுதியும் நேரிடவில்லையாம். இதுவரை

நாம் கேட்டிராத சம்பவமிது. வானசாஸ்திரிகளும், மின்சார சாஸ்திரிகளும் இதற்குக் காரணம் என்னவென்று கூறுவார்களோ அறியோம்.

***

தற்காலத்தில் மேனாட்டு பௌதிக சாஸ்திரிகள் அதிக ஆச்சரியகரமான உபகரணங்களைக் கண்டுபிடிக்கின்றனர். அவை கேட்பதற்கே ஆச்சரிய மாயிருக்கின்றன. அவைகள் வெளியாகும் சாஸ்திரப் பிரசாரப் பத்திரிகை முதலிய சமாசாரப் பத்திரிகைகள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவையென்ற எண்ணம் நம்மனதில் திடமாயிருக்காமல் போனால் அவை கட்டுக்கதைகளோ அல்லது விநோதக்கூற்றுகளோவென்று சந்தேகிக்க வேண்டியிருக்கலாம். தந்திமூலமாக சமாசாரங்களை தூரதேசங்களுக்கு அனுப்பி வருவது வெகுகாலமாய் நடந்து வருவதால் ஆச்சரியமாய்த் தோன்றவில்லை. பிற்பாடு ஒரு தந்தியின் ஒரு புறம் ஒரு மனிதனோ அல்லது ஒரு ஸ்திரீயோ பேசினால் அதை மற்றொரு புறத்தில் வெகு தொலையிலிருப்பவர் கேட்க முடியும் என்பது டெலிபோன். இதையும் நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆகையால் அதுவும் ஆச்சரியமாயில்லை. இதைக்காட்டிலும் ஆச்சரியமானது யாதெனில் தந்திகம்பிகள் இல்லாமலே ஆயிரக் கணக்கான மைல்கள் தூரம் சமாசாரம் அனுப்பமுடியும் என்கிறவிஷயம் பலவருஷங்களுக்குமுன் கேட்டோம். சென்னை போன்ற பிரதானமான பட்டணங்களிலும் சில பெரிய கப்பல்களிலும் இவ்விதம் சப்தத்தை வாங்கக்கூடியதும் அனுப்பக் கூடியதுமான கருவிகளை ஜனங்கள் நெருங்க அனுமதியில்லாத இடங்களில் வைத்திருக்கிறார்கள். ஆகாச மளாவிய தூண்கள் மேல் போகப்போக கூர்மையாக ஒருபெரிய மைதானத்தில் நிற்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் யந்திரங்களை நேரில் போய் பார்க்க ஜனங்களுக்கு சாதா

ரணமாய் அனுமதி கொடுக்கிறதில்லை, ஆகையால் இது விஷயமாய் இன்னும் ஆச்சரியம் குன்றவில்லை.

***

ஆனால் சப்தத்தை வெகு தொலைக்கு அனுப்ப முடியுமானால் ஏன் வெளிச்சத்தையும் ரூபத்தையும் வெகு தொலைக்கு அனுப்ப முடியாது என்ற ஒரு கேள்வி உண்டாகலாம். இது வெகு சகஜமே. ஆகையால் இதுவும் சாத்தியமாயிற்று என்று கேட்க நேயர்கள் சந்தோஷமடைவார்கள் இதன் சரித்திரத்தை விசாரிப்போம்.

***

பிரான்சு தேசத்தில் ஸ்ரீமான் பேலின் என்ற ஒரு பௌதிக சாஸ்திர நிபுணர் இருக்கிறார். டெலிபோன் கம்பி வாயிலாக சப்தத்தைக் கேட்பதுபோல் ஏன் அக்கம்பியின் மற்றொரு முனையில் நின்று பேசும் மனிதனை பார்க்க இயலாது? அதை சாதிக்க வேண்டுமென்ற அவா வுண்டாயிற்றும். 1914ஸு க்கு முன்னடியே $2\frac{1}{2}$ பர்லாங்கு நீளம் உள்ள கம்பியின் ஒரு பக்கத்தில் வைக்கப்பட்ட ஒரு மெழுகு வர்த்தியின் கதிர் போன்ற வெளிச்சத்தின் ரூபத்தை மற்றொரு பக்கத்தின் நுனிக்கு எதிராக வைக்கப்பெற்ற ஒரு திரையின் பேரில் விழும்படி செய்தாராம் ஆகையால் கம்பிவழியாக ஏன் போட்டோகிராப் படம் எடுக்க முடியாது என்ற எண்ணம் அவர் மனதில் உதித்தது அதற்குள் யுத்தம் ஆரம்பித்ததாகையால், இவ்வாராச்சியை கொஞ்சம் நிறுத்த வேண்டியிருந்தது.

***

பிரான்சு ராஜாங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி இந்தசாஸ்திரவிற்பன்ன ஆராய்ச்சிசெய்து ஆச்சரியகரமான ரகசியமான ஒரு யந்திரத்தை கண்டுபிடித்தனராம். அதா

வது வெகுதொலைக்கப்பால் இருவர் இருப்பினும் ஒருவர் ஒரு படமோ அல்லது கோடுகளினால் வரைந்த குறிப்போ ஒன்று மற்றவருக்கு எதிரே தெரியும்படி செய்யக் கூடிய யந்திரத்தைக் கண்டுபிடித்தார். இதன் உபயோகம் யாதெனில், தந்திக்கம்பிகூட இல்லாமல் வெகு தூரத்துள்ள தன் கீழ்தர உத்தியோகஸ்தர் பலருக்கு சேனாதிபதி வெகு ரகசியமாய் ஒரே சமயத்தில் தன்னுடைய உத்தரவுகளையும் சூட்சிகளையும் தெரிவிக்க முடிந்தது. நடுவில் தந்தியடிப்பவன் முதலியோருக்குங் கூடத் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை. இந்த யந்திரமானது சண்டையின் கடைசி பாகத்தில் மிகவும் உபயோகமாயிருந்ததாம்.

***

யுத்தத்தின் முடிவில் அட்லாண்டிக் மகாசமுத்திரத்தின் ஒரு கரையிலிருந்து மற்றொரு கரையில் ஒரு போட்டோப் படம் பிடிக்கக் கூடிய யந்திரத்தை 1920 ௵த்தில் கண்டு பிடித்தாராம். அவ்விதமாய் இப்போது படங்களும் எடுக்கப்படுகின்றனவாம். இதனால் ஒரு வர்த்தமானப் பத்திரிகையின் காரியஸ்தனை ஒரு விசேஷமான சம்பவத்தைப்பற்றி அறிக்கை யெழுதி யனுப்புவதற்கு அனுப்பும் போது இந்த யந்திரத்தைக் கொடுத்தனுப்பினால் தந்தி மூலம் சமாசாரத்தை யனுப்புவதோடு இவ்வியந்திரத்தின் மூலம் எந்த இடம் அல்லது வஸ்துவைப்பற்றி அவ்வறிக்கை கூறுகிறதோ அது அல்லது அவருடைய படத்தை ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலுள்ள தன் பத்திரிக்கை ஆபிசிலுள்ள அவ்வியந்திரத்தின் மற்றொரு பக்கத்தில் படமாய் பிடிக்கும்படி இயலும். இது எவ்வளவு உபயோகமுள்ளது!

***

ஓர் தேசத்தில் பெரிய கொலை அல்லது கொள்ளை முதலிய செய்து விட்டு மற்ற தேசங்களுக்கு ஓடிப்போகும்

குற்றவாளிகளின் படங்களையும் பெருவிரல் குறிப்புகளை யும், அல்லது உயரம் பருமன் முதலிய அடையாள விபர ங்களையும் பற்பல தேசங்களுக்கு அனுப்ப இந்த யந்திரத்தா லாகும்.

***

மேலும் தந்தி மூலம் சமாசாரம் அனுப்புவது ஆங் கில அல்லது மேல் நாட்டு பாஷைகளின் உபயோகப்படும் எழுத்துக்களை குறிக்கக் கூடிய சில அடையாளங்களைக் கொண்டு தான் அனுப்பப்படுகிற தென்பது யாவரும் அறிந் தவிஷயமே. ஜப்பான் பாஷைவார்த்தைகள் அந்த அடை யாளங்களுக்கு இணங்கா வகையால் அவைகளை தந்தி மூலம் அனுப்பமுடிய வில்லை. ஆகையால் அந்த பாஷை வார்த்தைகளை ஆங்கிலம் முதலிய பாஷைகளில் மொழி பெயர்த்துதான் அனுப்பவேண்டி வரும். ஆனால் இவ்யந் திரம் மூலமாயோ அந்தந்த பாஷை எழுத்துக்களையே பட மாக அனுப்ப இயலும். இது இந்தியாவிலும் சீக்கிரம் உப யோகிக்கப்படும் என்று எதிர் பார்க்கிறோம்.

***

ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு வியா பாரக்கடிதங்கள் அனுப்பவும் அவைகளை ஒப்புக்கொள்ள வும் எவ்வளவு தாமதம் ஏற்படுகிறது. இவ்யந்திர மூலம் தந்தியைப்போல் அவ்வளவு சீக்கிரத்தில் முழுப்பத்திரத் தின் படத்தை அனுப்பவும், அதை அம்மூலமாகவே மறு மூனையிலிருந்து ஆமோதித்து கையெழுத்துச் செய்து ஒப்புக் கொள்ளவும் இயலும். ஆகையால் வியாபாரிகளுக்கு மிகவும் உபயோகமாகும்.

***

மேற் கூறிய வைகள் எல்லாம் தற்காலத்தில் பிராஞ்சு தேசத்திலும் அமெரிக்காவில் சில பாகத்திலும் உபயோக

மாய் விட்டன. சிக்கிரத்தில் அதாவது 1922 ஆம் வருஷத்திற்குள் இரண்டு புதிய யந்திரங்களைக் கண்டுபிடிக்கப் போகிறாரும்.

***

ஓரிடமிருந்து போட்டகிராப் மூலமாக மற்றொரு தேசத்தில் தானுகவே அச்சடித்துவரும்படி ஒருமணிக்கு3லட்சம் வார்த்தையாக ஒரு வர்த்தமான பத்திரிக்கை அடிக்கக் கூடிய யந்திரம் ஒன்று மற்றொன்று "ஸினிமா" என்ற படக் காட்சியில் ஒரு நூதனமான மாறுதலை யுண்டு பண்ணுவதற்கு யந்திரமாம். அதாவது இப்போதைக்காட்டிலும் இடை விடாது ஒரே படமாயும் வெகு விரைவாக படமெடுக்க கூடிய ஒரே யந்திரமாம்.

***

இவைகளை எல்லாம் காளடைவில் இந்தியாவில் நாமும் கண்கூடாகப் பார்க்க இயலும். இந்தியர்கள் இம்மாதிரியான முயற்சிகளில் பிரவர்த்திக்க வேண்டிய தவசியமில்லையா? எப்போது அது இயலுமோ. அதற்கேற்றவசதிகளும் பள்ளிக்கூடங்களும் எப்போது ஏராளமாய் ஏற்படுமோ தெரிய வில்லை. நமது ராஜாங்கச் சட்டசபை அங்கத்தினர் இவைகளில் கருத்து வைத்தால் கொஞ்சமாவது சாத்திய மாகும்!

***

லந்தன் மாநகரத்திலிருக்கும் ஸ்ரீமான் எ. எப் பெமின் என்ற மின்சார சாஸ்திர நிபுணர் முன் காலத்தில்

(இதின் தொடர்ச்சியை 191-ம் பக்கம் பார்க்க)

ஆர் அரங்கசாமி ஐயர்

பிரஹ்மஸ்ரீ திவான்பஹதூர்

ஸர். டி. சதாசிவ ஐயர்

பி. ஏ., எம். எல்., பென்ஷன் ஹைகோர்ட்டுஜட்ஜ்

அவர்கள் மீது

சிறப்புக்கவி.

கீர்த்தனம்.

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஸர்-டி-சதாசிவஐயரைப் போலே
சமரச சன்மார்க்க ரெவர் புவிமேலே (ஸர்)

அநுபல்லவி.

தர்மகுண வந்தணராகப் பிறந்தவர்
தவஞானங் கல்வியாசாரத்திற் சிறந்தவர்
கர்மவினை மதுவைக்களைந்திட வறைபவர்
கருதருசாதுக்களுடனென் றுறைபவர் (ஸர்)

ஆங்கில முதற்கலையாவுந் தெரிந்தவர்
ஐகோர்ட்டு ஜட்ஜி யுத்தியோகம் புரிந்தவர்
ஓங்குஸர் திவான்பகதூர் பட்ட மடைந்தவர்
உற்றுப்பெற்றவன்னைக்குண்மையாய் நடந்தவர் (ஸர்)

சாற்றுமறையோர் குலதருவாய் முளைத்தவர்
தனிநீதியரசுசாகையாய்க் கிளைத்தவர்
போற்றும் பிரம்மஞானக் கனியாய் விளைத்தவர்
புண்யநெறியறியாதவருக்கா யிளைத்தவர் (ஸர்)

சத்தியநிலைதனை சற்றுமே பிரியார்
தங்கும் பிரம்மஞான சங்கத்திற் குரியார்
இத்தரையிலெவர்க்கு மிடரதைப் புரியார்
யிலகுஜீவகாருண்ணியப் பெரியார் (ஸர்)

பாரிஸிபடையும் சகோதரரென் றெண்ணுவர்
டகருங்கிருஷ்ணதாசராய்ப் பூசைப்பண்ணுவர்
சிறிலதுமிட்காமியத்தையே நண்ணுவர்
திகழும் பஞ்சமருநஞ்சிவனென் றுன்னுவர் (ஸர்)

குலவுமூவாசையைக் கொடிதென நீத்தவர்
குணமாதர்முன்னேற்றமடையக்கண்பார்த்தவர்
நிலவுபிரஹ்மஞான சங்கத்திற் சேர்ந்தவர்
நெறிபுளவஸந்த தாசரைக் காத்தவர் (ஸர்)

சமரசஞானமே சாற்றுமுப தேசர்
சத்துச்சித்தானந்தநித்யப்பிர காசர்
பலமுறுபோக நிலைத்தமுகவி லாசர்
நிகழ்ந்துமதுரகவிநடராஜ னேசர் (ஸர்)

வாழி

வாழ்க காஞ்சி மாநகரோங்கியே
வாழ்க பிரஹ்மஞான சங்க வையகம்
வாழ்க ராமசாமி வஸந்த தாஸர்
வாழ்க சதாசிவ வள்ளலும் வாழ்கவே.

சுபம்.

[இது காஞ்சீபுரம் பிரமஞான சங்கம் மதுரகவி, பு. நடராஜ வுபாத்தியாயரவர்களால் இயற்றப்பட்டது.]

ஸி. ஜினராஜ தாஸர்

பிரஹ்மஞான சபைக் கிளைச்சங்கங்களுக்கு

விடுத்த நிருபம்;

அன்பார்ந்த சகோதரர்காள்!

நமது மகனீயரான அக்கிராஸனபதியவர்கள் பிரஹ்ம ஞான சபையின் உபஅக்கிராஸனாதிபத்ய மென்ற உயர்பதவியை எனக்கு அளித்திருக்கின்றனர். ஆகையால்

யான் நாம் செய்யவேண்டுவனவற்றைப்பற்றி இப்போது உங்களுக்கு எழுதித் தெரிவிக்கலானேன். பிரஹ்மஞான சபையின் உபதேசங்கள் சென்ற விடமெல்லாம் அறிவையும், ஆறுதலையும் அளித்தே வந்திருக்கின்றன வென்று நம் சபைக்கு விரோதியானவன்கூட ஒத்துக்கொள்வான். சென்ற 46 வருடங்களாக நம் சபையானது உலகத்திற் செய்திருக்கும் திருத்தொண்டின் பயனாக ஜனங்களின் எண்ணங்களும் முயற்சிகளும் முக்கியமான ஏற்ற மாறுதல்களை யடைந்திருக்கின்றன வென்பதை ஒருவரும் மறுக்க வொண்ணாது.

ஆனால் நாமிதுகாறும் செய்திருப்பது இனிச் செய்ய வேண்டியதில் ஒரு சிறு பாகமேயாகும். பிரஹ்மஞானத்தின் ஒரு சிறு பாகத்தையே யறிந்திருக்கிறோம், அறியவேண்டியதோ கரையிலது. பிரஹ்மஞான உபதேசத்தின் உதவியைக் கொண்டு மனிதவாழ்க்கையின் உத்தேசத்தை மாற்ற ஒருவாறு ஆரம்பித்திருக்கிறோம். எல்லா மனிதர்களும் பிரஹ்மஞான தருமத்தைக் கொண்டு தம் வாழ்க்கையை நடத்தும் நாள் வெகு தொலையிலிருக்கின்றது. இதையே நம் லக்ஷ்யமாய்க் கொண்டு நாம் முயலவேண்டும். ஏன் எனில், நம்மைச் சிறுகச்சிறுகச் சுயநல மற்ற மேன்மையான சீலத்தையுடையவராகும்படி எந்த பிரஹ்மஞானமானது செய்திருக்கிறதோ, அவ்வெளிச்சத்தையே பிறருக்குக் காட்டி நீங்களும் அவ்விதமான பெரும்பயனை யடையுங்கள் என்று சொல்வது நம்கடமையாகும். நாமடைந்திருக்கும் லாபத்தைப் பிறருக்கும் பகுந்து கொடுப்போமாக!

ஆகையால் ஒவ்வொரு கிளைச்சபையின் முக்கிய நோக்கமும் பிரஹ்மஞான ஒளியைப் பாவச்செய்வதேயாக வேண்டும். இவ்விஷயத்தில் எவ்வளவு முயற்சி யெடுக்கப்படுகிறதோ அவ்வளவு மட்டில் தான் கிளைச்சபையானது பிரஹ்மஞான சபைக்கு உபயோகமுள்ளதாகும். இதைப் பற்றித்தான் நான் தங்களுக்கு எழுதவிரும்புவது. இது

வரை உபயோகப்பட்டுவரும் முறைகளுடன் ஒரு புதிய முறையையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது என் கருத்து. எண்ணத்தின் உருவம் என்றால் யாதுஎன்றும், அது எப்படித் தன்னைச்சுற்றிலும் தன்னுடைய குணங்களைப் பரவச் செய்கிறதென்றும், அவ்வெண்ணமானது சுயநலம் நாடாத சங்கற்பமாயின், ஈசுவரனிடமிருந்து அருட்பெருக்கை ஆகர்ஷித்து இவ்வுலகிற் பிரவகிக்கச்செய்கிறதென்றும் நாம் படித்தறிந்திருக்கிறோம். ஒரு எண்ண உருவானது நன்றமைக்கப் பெறாதிருப்பினும், திருத்தமற்று மங்கலான வர்ணமுற்றதாயிருப்பினும், அதன் உபயோகமானது குன்றி, ஈசுவரனது அருளை இழுக்கச் சக்தியற்றதாகின்றது. அதுபோலவே ஒவ்வொரு பிரஹ்மஞான சபையின் கிருஹமும் ஒரு எண்ண உருவம் எனலாம். அதன் மூலம் பிரஹ்மஞானச் சக்திகள் சுலபமாகவோ, அல்லது கடினமாகவோ வெளிச்செல்லக் கூடியதாகவிருக்கலாம். அது கிளைச்சபையின் தன்மையைப் பொறுத்ததாகின்றது.

பிரஹ்மஞான மந்திரமானது ஸ்தூலமான சுவர்களையும் நாற்காலி முதலிய சாமான்களையும், புஸ்தகங்களையும் கொண்டதாயிருப்பதோடு, அக்கிருஹத்தின் உருவத்தையே கொண்ட ஒரு எண்ண உருவமாகவும் இருக்கின்றது. இவ்வெண்ண உருவத்தினின்று ஒரு சக்தியானது நாலா பக்கங்களிலும் எக்காலத்திலும் பரவிக்கொண்டிருக்கின்றது. அக்கிருஹத்தின் கதவுகள் மூடியிருப்பினும் திறந்திருப்பினும், சபையோர்கள் கூட்டங்கள் கூடிக்கொண்டிருப்பினும், அப்படிச் செய்யாமலிருப்பினும், இச்சக்தி பரவிக்கொண்டேயிருக்கின்றது. கட்புலனாகத் தோன்றும் கற்களாலும் செங்கல்களாலும் ஆக்கப்பட்ட கிருஹத்தினால் எவ்வளவு உபயோகமுள்ளதோ அவ்வளவு உபயோகமும் இந்த மானஸிகமான உருவத்தின் வேலையினால் செய்யப்படுகின்றது.

பிரஹ்மஞானத்தை அறிய விரும்புபவர் பால் நமக்கொரு கடமையுண்டு. அவன் அந்த ஞானத்தை அடைவதைத் தடுக்கக்கூடிய ஒவ்வொரு இடையூறையும் நாம் விலக்க வேண்டும். பிரஹ்மஞான மந்திரங்களில் சாதாரணமாய்க் காணப்படும் ஸௌந்தரிய மின்மையை நாம் நீக்கவேண்டும். நமது பிரஹ்மஞான மந்திரங்களிலிருந்து நாம் எதைப்பரவச்செய்ய முயலுகின்றோமோ அந்த ஞானத்தை அம்மந்திரங்களிலுள்ள அழுக்கினாலும் அசுத்தத்தினாலும் நாமே மறுப்பவர்களாயும் சந்தேகிப்பவர்களாயும் ஆகின்றோம். ஒரு அழுக்குத்துணிகளிருப்பினும் ஒருபடம் கோணலாகத்தொங்கவிட்டிருப்பினும், புஸ்தகங்களின் பக்கத்தில் ஒட்டப்பட்ட எண்ணிக்கைச் சீட்டானது கோணலாக ஒட்டப்பட்டிருப்பினும், நாற்காலி அல்லது மேஜையானது சுத்தமாகவைக்கப்படாவிடினும், இவை ஒவ்வொன்றும் பிரஹ்மஞானத்தைப் பரவச்செய்ய விரும்புபவனுக்கும், அறிய விரும்புபவனுக்கும் இடையூறுகின்றது. ஸாலோமேன் என்ற பண்டைக்காலத்து ஞானியானவர் வெகு அழகாய்க்கூறியபடி "ஞானமென்பது எல்லாவற்றையும் இனிமையாயிருக்கும் வண்ணம் ஒழுங்கு படுத்துகின்றது" ஆகையால் பிரஹ்மஞான மந்திரமானது அழகு பெற்று விளங்க வேண்டுவது அவசியமாகும்.

தன்னைத் தேடுபவனைச் சுற்றியுள்ள எவற்றையும் அழகுடன் இலங்கச்செய்வோமேயாயின் ஞானமானது அவனுடைய மனதில் எளிதில் நன்கு பதியும்.

ஆகையால் பிரஹ்மஞான மந்திரத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் உபகாரியாகவாவது அபகாரியாகவாவது இருக்கின்றது. அழகென்பது விலைபெற்ற அலங்கார வஸ்துக்களாலாக வேண்டுமென்பது இல்லை. வஸ்துக்களை ஏற்ற அளவுள்ளவைகளாய் தத்தமக்கு ஏற்ற இடங்களிலும், ஒழுங்காயும், மனோஹரமாகவும், அமைத்தலினாலேயே அதிகமான அழகையுண்டாக்க முடியும். வஸ்துக்

களின் மிகைமை நீக்குதலே ஒரு அழகாகும். இப்போதிருப்பதைவிட ரம்மியதரமாய் எந்த கிருஹத்தைத்தான் அமைக்கமுடியாது? அந்தராத்மாவில் துலங்கும் ஸௌந்தரியத்தை வெளியில் காட்டும்படி பிரஹ்மஞான மந்திரங்களை யமைத்தல் தான் அவசியமாகின்றது. ஏன் எனில் பிரஹ்மஞானமானது அதன் விசாலமான பரப்பையுற்று நோக்கினும், அதன் நுண்ணிய விபாகங்களையுற்று நோக்கினும், அளவில்லா வழகுவாய்ந்துளது. அது அமானுஷிகமானது. மனிதனுல் அமைக்கப்பெற்றதன்று. திவ்யஞானமானது ஸநாதனமாக ஸத்யலோகத்திலே எக்காலும் விளங்குகின்றது. வெளித்தோற்றம் நன்கமைக்கப் பெற்றிருக்குமிடத்தில் ஞானமானது யாவற்றையும் அழகுபெறச் செய்கின்றது.

ஒவ்வொரு பிரஹ்மஞான மந்திரத்தையும் திவ்யஞானம் வசிக்கத்தக்க கோயிலாய் நாம் ஆக்கினுல், இச்சபையின் ரக்ஷகர்களாகிய ஞானகுரவர்களின் ஸூக்ஷ்மசரீரத்தின் பிரிக்க முடியாத அங்கங்களாக நம்முடைய பிரஹ்மஞான மந்திரங்களை ஆக்க முடியும். அவ்வாறு இல்லையேல், அப்படி ஆக்க இயலாது. நாம் அங்ஙனம் செய்யின், அக்குரவர்கள் நமக்கருளியிருக்கும் உபதேசங்களின் மூலமாய் நமக்கனுக்கிரகம் செய்வதோடு, நாம் அவைகளைப்படித்து வெளியிற் பரவச்செய்வதற்காகக் கூடியிருக்கும் கிருஹங்களின் வாயிலாகவும் நமக்கு சதா அனுக்கிரகம் செய்து கொண்டிருப்பார்கள். மந்திரங்களின் மானஸிக உருவங்களானவை அப்பெரியோரின் அத்புதமான மானஸிக அங்கங்களா யமைந்து, தம்மூலமாக வெளியுலகுக்கு அம்மகான்களின் அருளைப்பரவச் செய்வதற்கு ஏற்ற புதிய கால்வாய்களாகும். நமது தலைவர் சபையிற் புதிதாய்ச் சேர்ந்த சிலருக்குச்செய்த உபந்யாஸத்தில் அடியிற்கண்டபடி அருளிச் செய்திருக்கின்றனர்.

"ஓர் பிரஹ்மஞான மந்திரத்தில் நீங்கள் கூடும் பொழுது, ஆத்மசக்திகள் அக்கூட்டத்தினுட் புகுந்து அதன்

மூலம் சுற்றியுள்ள பிரதேசங்களிற் பரவச்செய்ய அவகாசத்தையுண்டு பண்ணுகிறீர்கள். எங்கு எங்கு மேலான எண்ணத்துடன் பாரமார்த்திகமான காரியங்களை யுத்தேசித்து ஜனங்கள் கூடுகின்றார்களோ, அங்கு அங்கு உலகத்திற்கு உதவி செய்யக் கங்கணங்கட்டிக்கொண்டு எப்போதும் ஆவலுடன் காத்திருக்கும் மகான்கள் தங்களுடைய அருளை அக்கூட்டங்களிற் பொழிகிறார்கள். அதன் மூலம் அவ்வருளானது சுற்றத்தில் பரவுகின்றது. இதுதான் பிரஹ்மஞானக் கிளைச்சபையின் முக்கிய உபயோகமாகும்.,,

உலகில் சகோதர உணர்ச்சியை யுண்டாக்குவது பிரஹ்மஞானிகளாகிய நம்முடைய முதற்கடமையாகும். அழகையுணர்தலே ஒற்றுமையை யுண்டுபண்ணும். அழகின் சக்தியை மனிதர் உணர்வரேல் சகோதர பாவமானது உண்டாகாமலிராது. ஸகோதரபாவத்தை யுண்டாக்குவதற்கு ஏற்ற ஒவ்வொரு சாதனங்களையும் நாம் உபயோகித்தலவசியம். எல்லா மனிதர் மனத்திலும் சுபாவமாய் ஏற்பட்டுள்ள அழகுணர்ச்சியானது இம்மேலான முடிவைப்பெறுதற்கு ஒரு சாதனமாகும். புத்திசாலித்தனம் என்ற கருவி மட்டும் போதுமென்றிருக்காமல் இவ்வுணர்ச்சியாகிய கருவியையும் உபயோகிப்போம். அப்படியாயின் ஞானமானது தன் ரஹஸ்யங்களையும் திவ்யமான பலத்தையும் நமக்கு வந்துதவும்.

தங்களுடைய ஸதபீஷ்டங்களனைத்தையும் ஸபலமாகும்படி விரும்பும் தங்கள் ஸகோதரன்,

ஸி. ஜினராஜதாஸன்.

[எம். எஸ். சுந்தரசர்மா, ஆர். ரெங்கசாமி ஐயர் இருவர்களும் மொழிபெயர்த்தது.]

தயாஜனேசர் என்னும் கிரேக்கரின் சரித்திரம்.

அனேக நூற்றாண்டுகளுக்கு முன், கிரேக்க தேசத்தின் தலைநகராகிய ஆதென்ஸ் பட்டணத்தில் தயாஜனேசர் (Diogenes) என்ற பெயருடைய, விபரீதபுத்தியுள்ளவர் ஒருவரிருந்தார். ஆதென்ஸ் நகரத்திலுள்ளோர் எல்லோரும் ஸத்குண ஸம்பன்னரென்று பிரஸித்தி பெற்றவர்கள். ஆனால் இந்த மனுஷனோ பிறருடன் முறணுவதே தனக்கு பூஷணமாகக் கொண்டிருந்தார். ஆகையால் அவ்வூரிலுள்ளோர் எல்லோரும் இவரை வெறுக்கும்படி நேரிட்டது.

அனேகர் இவரை, ஏற இறங்கக் கண் கொட்டாமல் பார்ப்பதும் பார்த்தபின் சிரிப்பதும் உண்டு. தயாஜனேசருக்கு இதில் மிகப்பிரியம். வேறுசிலர் இவரை ஒரு மஹானெனக்கருதி வந்தனர். இதனால் இவருக்குண்டான மகிழ்ச்சி முன்னிலுமதிகம்; இவரது நடவடிக்கைகள் விபரீதமாகவும் ஒரு தோரணையுள்ள தாகவுமிருந்ததால், கொஞ்சகாலத்திற்குப்பின் கிரேக்கானேகர் இவரைப்பின்பற்றி இவரைப்போல் ஒழுக வாரம்பித்தனர். இதனால் இவருக்குண்டான மகிழ்ச்சிக்களவேயில்லை.

இவர்; சில சமயங்களில் மணற்றரையிலும், வேறு சமயங்களில் வீட்டுத் திண்ணைகளின் மேலும், வழிகளிலும் உறங்குவார். இவர் தம்முடன் ஒரு மரத்தொட்டியையு மெடுத்துக்கொண்டு போவதுண்டு. இராக்காலத்தில், இவர், ஒரு பூனையைப்போல் சுருண்டு கொண்டு இந்த அதியத்புதமான (மரத்தொட்டி) மஞ்சத்தில் கண்வளருவார்.

பனிச்சென்று வெயில் அடித்துக்கொண்டிருந்த ஒரு நாள் மத்தியானம், இவர் ஏற்றின விளக்கொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு, ஜனங்கள் நிறைந்திருந்த ஒரு வீதியின் வழியே சென்றார். இழுந்த பண்டமொன்றைத்

தேடுவதுபோலவும் பாவனை செய்தார். இதைக்கண்ணுற்ற ஜனங்கள் "ஐயா, இந்தப்பட்டப்பகலில் விளக்கைக் கொண்டு என்னதேடுகின்றீர்" என்றனர். தயாஜனேசர் "இங்கு எவனாவது யோக்கியன் ஒருவன் இருக்கிறானோ என்று பார்க்கிறேன்" என மறுமொழி பகன்றார்!

இவர் காலத்திலேயே மஹாப்பிரஸித்தி பெற்றவரும் மஹா வீரருமான சக்கரவர்த்தி பொருவரிருந்தார், அவரது பரிவாரங்களும் அவரை அண்டினவரும் எண்ணிறந்தவர். இவர்தான் மஹா அலெக்ஸாந்தர். இவர் அக்காலத்திலிருந்த மனிதர்களெல்லாரிலும் மிகப்பிரஸித்தி பெற்றிருந்ததினால் இவருக்கு மஹா அலெக்ஸாந்தரென்று பெயர். ஒருநாள் மணலில் உட்கார்ந்து கொண்டே தயாஜனேசர் வெயில் காய்ந்து கொண்டிருக்கையில், அலெக்ஸாந்தர் அவ்வழிச்சென்றார். வழக்கப்படி ஜனங்கள் அவ்வரசருக்குக் கட்டியம் கூறிப் பெருத்த கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். தயாஜனேசர்மாத்திரம்தாமிருந்த இடம் விட்டு அசையவேயில்லை, சக்கரவர்த்தியைப் பற்றிக்கவனிக்கவுமில்லை.

அலெக்ஸாந்தர் இதையறிந்து, "இந்தக் கந்தையுடுத்த பஞ்சை நம்மை வணங்காதது ஏன்? இவனுக்கு நம் சங்கதி தெரியாது போலும்" என்று நினைத்துக்கொண்டு, கடுத்த முகத்துடன் தயாஜனேசரைப்பார்த்து "நான் அலெக்ஸாந்தர் என்பது தெரியுமா?" என்று மிகவும் கர்வத்துடன் கேட்டார். இதைக்கேட்ட ஜனங்களெல்லோரும், தயாஜனேசர் திடுக்கிட்டுப் போய்விடுவார்; தனது நடத்தையைப்பற்றியும் வருந்துவார் என்று நினைத்தார்கள். ஆனால் தயாஜனேசர் இவர்களெதிர்பார்த்தபடி நடந்துகொள்ளவில்லை. அவர், தானிருந்த விடம் விட்டுப் பெயராமல் அலெக்ஸாந்தரை நிமிர்ந்து பார்த்து, தானும் ஒரு சக்கரவர்த்தியாயிருந்தால் எவ்வளவு கம்பீரத்துடனும் கர்வத்துடனும் பேசுவாரோ அந்த பாவனையுடன் "நான்

தயோஜனேசர் என்பது உனக்குத்தெரியுமோ?'' என்று கேட்டார்.

இவ்வாறு இவர் பதிலுரைத்ததைக்கேட்ட அலெக்ஸாந்தர் திடுக்கிட்டு "நான் தங்களுக்கு ஏதாவது செய்யக் கூடுமா?'' என்று கேட்டார்.

தயாஜனேசர் "ஆமாம், நீ எனக்குச் செய்யக்கூடியது ஒன்றுண்டு. என்பேரில் விழும் வெயிலைத் தடுக்காதே, ஒதுங்கி நில்!'' என்றார்.

இந்தப் பதிலைக்கேட்டு அலெக்ஸாந்தரே மிகவும் ஆச்சரியப்பட்டாராம். நாமும் இவரது துடுக்கையறிந்து வியக்கக்கூடும்.

ஆயினும் இவர் தான் சந்தித்தோரெல்லாரையும் ஒரே மாதிரியாய் நினைத்து அவருக்கு மனம் கசியும்படி நடந்து கொண்டது சிலாகிக்கத்தக்கதல்ல.

இவர் நெடுநாள் ஜீவித்திருந்தும் கடைசிவரையில் தமது விபரீதபாவனைகளை மாற்றவேயில்லை.

எஸ். ஆர். அனந்த நாராயணையர்.

ஸ்நேஹலதா தேவியின் லிகிதம்.

[கலியாணக்காலம் அடுத்துவருகின்றதாதலின், வரதக்ஷிணையினாலுண்டாகும் தீங்குகளை நமது ஜனங்களுக்கு நினைப்பூட்டும் பொருட்டுநமது அருமைச் சஹோதரியான ஸ்நேஹலதா தேவி தனது பிதாவுக்கு எழுதிவைத்த கடிதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே எழுதுகிறோம்.]

னமிக்க என்னருமைப்பிதாவே,!

எனது விவாஹ நிமித்தம், தாங்கள் நமது இருஹத்தை அடமானம் வைத்துக் கடன் வாங்குவதாகச் செய்திருக்கும் யோசனைக்கு நான் சிறிதும் உடன்படேன். தாங்கள் அவ்விதம் செய்யக்கூடாது. தங்களுக்கு அவ்விதம் செய்ய அவசியமும் நேரிடாது. ஏனெனில் நாளைகாலை ஸூரியோதயமாகு முன், தௌர்ப்பாக்கியையும் தங்களது புதல்வியுமான எனது ஆவியானது இச்சஞ்சல வுலகைவிட்டுச் சாந்த லோக மடைந்துவிடும்.

தாங்கள் என்னிடம் அளவில்லாத அன்பைப்பாராட்டி வந்திருக்கின்றீர்கள். தங்களது ஸீமந்த புத்திரியும் இளம் பெண்ணுமான நான், தங்களது மார்பிலேயே வளர்ந்து வந்தவள். அன்புமிக்க எனது பெற்றோரிடம் நான் அடைந்த ஸுகம் இவ்வகைப்பட்ட தென்பதை இராஜகுமாரிகள் தங்களது கனவிலு மறியார்கள். ஆதலால், என்னிமித்தம் நமது குடும்பமுழுமையும் நடுவீதியில் நிற்கவும் என்னிடத்தன்பே வித்தாயிருந்த தாங்கள் கஷ்டஜீவனத்திற்கும் தரித்திரத்திற்கும் ஆளானால், அது, நான் தங்களுக்குச் செய்யும் கைம்மாறாகுமோ? நேற்று முன்தினம் விடிந்தது முதல் சாயந்திரம் வரை அலைந்து திரிந்து ஆயாஸத்துடனும் களைப்புடனும் தாங்கள் நமது வீட்டுக்குத்திரும்பி வந்த பொழுது தங்களது மனதிலிருந்த கவலையையும் கலக்கத்தையும் தங்களது முகவடிவால் தெரிந்தேன். தவிர "எல்லாம் போச்சு" என்ற அமங்கல வாக்கைத் தாங்கள் வாய்விட்டுச் சொன்னதையும் கேட்டேன். அது முதல் வாட்ட முற்ற தங்களது முகக்குறி என் மனத்தை விட்டகலவில்லை. அவ்வார்த்தைகளும் என் காதுகளில் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. தவிர எனது விவாஹத்திற்கு வேண்டிய பணத்தை யுதவி செய்து, நமக்கு அனுகூலமாகவும் முடியுமென்று தாங்கள் நம்பியிருந்த அந்தப்பெரிய அடமானம், முடிவு பெறும்

சமயத்தில் நின்று விட்டதென்றும், நமது கஷ்டம் தீர வேண்டுமென்றால் நமது வீட்டைத்தான் அடமானம் வைக்கவேண்டுமென்று தாங்கள் சொல்லிய வார்த்தைகளையும் கேட்டேன்.

அப்பா! இந்த யோசனை நான் ஸஹிக்ககூடியதல்ல. எனக்குக் கலியாணமாகவில்லையே, என்ற கவலை தங்களுக்கு ஒரு பெரும் பாரமாயிருக்கிறது. அந்த பாரத்தையொழிக்கத்தானே எனக்குக் கலியாணம் செய்யவேண்டும்? இதுவரை எனக்குக் கலியாணம் ஆகாததினால் தங்களுக்குண்டாயிருக்கும் அபவாதங்களுக்கும் அளவுண்டோ? எனக்குத் தகுந்த வரன் தேடத்தாங்கள் பட்ட சிரமம் எவ்வளவு? அதுவும் பலிக்கவில்லை!

இந்த யோசனை வேண்டவே வேண்டாம்! எனது முன்னோர்கள் வசித்துவந்த இந்த வீட்டில் அன்னியர்கள் வசிக்கவாவது நடமாடவாவது கூடவேகூடாது. அவர்களது குரலும் கேட்கக்கூடாது. வினையின் பயனை அனுபவிக்கவேண்டியவள் நானேயன்றித் தங்களுக்கு அதில் சிறிதும் ஸம்பந்தமில்லை.

பர்ட்வானில் பெருவெள்ளம் வந்த பொழுது கஷ்டப்பட்ட ஜனங்களின் துக்க நிவர்த்திக்காக, பெருந்தன்மை நிறைந்த படிப்பாளிகளான சிறுவர்கள் அனைவர் பரோபகார சிந்தையுடன் முன் வந்து உதவினார்களென்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஸாது ஜனங்களிடம் பூர்ண தயையைக்காட்டின அவர்களது உள்ளங்குளிருமாறு ஸர்வேசுவரன் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

மற்றுமனேக சிறுவர்கள் அன்னிய நாட்டுச்சரக்கு வாங்குவதில்லையென்று ஸங்கல்பம் செய்து கொண்டதாகவும் கேள்விப் பட்டிருக்கிறேன்.

தவிர, சிலநாட்களுக்கு முன்புதான் பெருந்தன்மை யுள்ள மாணவர்கள் திரள் திரளாகச் சேர்ந்து வீடு வீடாய்ச்சென்று தென்னாப்பிரிக்காவிலிருக்கும் நமது நாட்டாரின் கஷ்டநிவர்த்தி நிமித்தம் திரவியம் சேகரம் செய்ததாகக் கேள்விப்பட்டேன்.

இவ்வளவெல்லாமிருக்க ஸர்வஜனங்களின் கஷ்டங்களை அறியக்கூடியவர் அவர்களில் ஒருவரும் இல்லாமற்போயின ரோ?

அப்பா, நேற்று இராத்திரி ஒரு ஸ்வப்னம் கண்டேன், அப்போதே இன்னது தான் செய்யத்தக்கதென்று தீர் மானமும் செய்து கொண்டேன்.

அதுவரையும் கேட்டிராத இனியராகங்கள் என் மனதைக் கொள்ளை கொண்டன. நீரிலும் நிலத்திலும் நான் பார்த்திராத ஒரு பெருஞ்ஜோதியையும் கண்டேன். அப் பொழுது நம தன்னையாகிய துர்க்காதேவி, அன்புடன் கூடின புன்னகையுடன் என்னைப் புண்ணியாத்மாக்கள் வஸிக்கும் ஸ்வர்க்கலோகத்திற்கு வரும்படி சமிக்கை செய்தார். அப்பொழுதே தங்களையும், லதா என்னி மித்தம் கவலையால் வாடின முகத்துடன் கூடிய என்னன்னை யையும் நமது வீட்டிற்கே விளக்குப் போன்றிருக்கும் என்னிளையோளையும் நினைத்தேன். பின்பு உங்களெல்லா ரையும் ரக்ஷித்து விடுகிறதென்று தீர்மானித்துப் பரம கிருபையுடன் என்னையழைத்த தேவியினிடம் நான் தாமத மின்றி வந்து விடுவதாகவும் சமிக்கைசெய்தேன்.

நான் போனபின், நீங்கள் என்னுடலின் மீது விழு ந்து கண்ணீர் விட்டழுவீர்கள்.

நான் போவது நிச்சயம், வீடு மாத்திரம் மீந்து நிற்கும்.

இந்த ஸ்வப்னமான பின்பு, எனது லோகவாழ்க்கையை எவ்வாறு எளிதில் முடிக்கலா மென்று யோசித்து, நெருப்பு, நீர், நஞ்சு ஆகிய இம்மூன்றில் முதலாவதான நெருப்பே சிலாக்கியமான தென்று தீர்மானித்தேன்.

நான் மூட்டு மிந்த நெருப்பினால் நமது தேசமும் பற்றி யெரிய வேண்டுமென்பது எனது கோரிக்கை.

அப்பா! தங்களுக்கு நமஸ்காரம். எனது காலம் ஸமீபித்து விட்டது. பூமாதேவி கவலையற்று உறங்குகிறாள். நானும் அதிசீக்கிரம் மீளாநித்திரையில் இறங்கப்போகிறேன். இப்பொழுது எனக்கு என்றுமில்லாத மனமடங்காத ஸந்தோஷம் உண்டாகின்றது. இங்கு தங்களது மார்பின் மேல் வளர்ந்து வந்ததுபோல், பொன்னுலகெய்தி தேவியின் திருவடியினொளியிற் கலந்து, கூடிய சிக்கிரம் தங்களுடையவும் அன்னையுடையவும் வரவை எதிர்பார்த்தவளா யிருப்பேன்.

இங்ஙனம் அதிர்ஷ்ட ஹீனையாகிய தங்களது தனயை,

ஸ்னேஹலதை.

எஸ். ஆர். அனந்தநாராயணையர்.

புத்தக விமர்சம்.

இந்தியாவில் இஸ்லாம் நீதியும், இங்கிலீஷ் நீதியும்.

வைசியமித்திரன் உதவிப்பத்திராபர் டி. கெ. ஆர். சர்மாவால் இயற்றப்பட்டது விலை அணா 2. காரைக்குடியிலிருக்கும் வைசியமித்திரன் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது. இது ஒரு சிறு துண்டுப்புத்தகம். இஸ்லாம் ராஜாங்கங்கள் நடைபெற்ற பல நூற்றாண்டுகளில் இஸ்லாம் மன்னர்

களில் பலர் நன்னீதி செலுத்திவந்தனர் என்றும் ஔரங்கசீப் போன்ற சிலரைக்கொடுங்கோன் மன்னர் என்று சிலர் கூறுவது அவ்வளவு சரியல்லவென்றும், பிரிட்டிஷ் காலத்தில் மகாராணியவர்கள் ராஜ்யபாரத்தைத் தமது கைக்கொண்ட காலம்வரை ஆங்கிலதேசத்து ஈஸ்டுஇந்தியா கம்பேனியாருடைய கவர்னர்களும் கவர்னர் ஜனரல்களும் மகம்மதியரைப்போல் அவ்வளவு நன்றாக ராஜ்யபாரம் செய்யவில்லையென்றும் கூறுவது இச்சிறுபுத்தகத்தின் கருத்தாகத் தோன்றுகின்றது. மகம்மதிய அரசர் அல்லது ஸுல்தான்கள் எல்லோரும் கொடியவர் என்று சிலர் கூறுவதுண்டு. அவர்கள் கட்சியை மறுக்க இப்புத்தகம் உபயோகமாகும் இச்சிறு புத்தகத்தில் பல அச்சுபிழைகள் காணப்படுகின்றன.

சிநேகலதா தேவியின் புனிதசரிதை. பண்டிதர் எஸ். ரத்னம் அவர்கள் இயற்றியது. வைசியமித்திரன் பிரஸ்ஸில் பதிப்பிக்கப்பெற்றது. அணா 1. இது ஒரு சிறு துண்டுப் புத்தகம். சினேகலதை யென்ற ஒரு வங்காளப்பிராமணப் பெண் தன்னுடையகல்யாணத்திற்காக வரனுக்குகொடுக்கப் பணம் கிடையாமல் தன் தகப்பனர் கடன் வாங்கத் தன் பூர்வீக கிருகத்தை பந்தகம் செய்வதற்காக உத்தேசிப்பதைத் தெரிந்து வீட்டைப்பிறர் கைவசம் விடுவதைக்காட்டிலும் தான்உயிர்நீப்பது நலம் எனத்துணிந்துதகப்பனருக்கு ஒருகடிதம்எழுதிவைத்து விட்டுத் தன்னைத் தீக் கிரையாக்கினள். இப்புத்தகத்தில் அக்கடிதத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு வெளியிட்டிருப்பதுடன் அக்கடிதத்தை அகவற்பாவில் அமைத்தும் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனை வங்கிப் படிப்போர் மனதில் பெண்ணை விவாகம் செய்து கொடுப்பதற்காகப் பெற்றோர் எவ்வளவு கஷ்டப்படுகின்றனர் என்பதும், பெண்ணைக் கொள்வதற்குப் பணம் கேட்கும் இந்திய வாலிபர்கள் எவ்வளவு பாபம் செய்தவராகின்றனர் என்பதும், அவ்வாலிபர் ஒருவாறு பணம்

கேட்கமாட்டோம் என்று மறுத்தாலும், அவர்தம் பெற்றோர் கன்னெஞ்சராய்ப் பணவாசை பிடித்துப் பெண்ணைப் பெற்றவரை வாட்டுகின்றனர் என்பதும் நன்கு தோன்றும். இப்படித்தோன்றி ஒருசிலரையாவது பெண்ணைக்கொள்ளப் பணம் கேட்பதென்ற பாதகத்தினின்று நீக்குமேயாயின் இப்புத்தகம் மிகவும் புண்ணியம் செய்ததாகும்.

தேசிய கீதங்கள்—பண்டித எஸ். ரத்னம் அவர்களால் இயற்றப்பட்டது. டி. கே. ஆ. சர்மாவால் வெளியிடப்பெற்றது. வைசியமித்திரன்பிரஸில்பதிப்பிக்கப்பெற்றது. இதன் விலை அணா 3. இந்தப் பாட்டுப்புத்தகத்தை மிக ஆனந்தத்துடன் படித்தோம். ஜனங்கள் மனதுக்கு இயைந்த நல்ல வர்ணமெட்டுகளில் பாடப்பட்டு உயர்ந்த கருத்துகளும் இனிய சொற்களும் அமைந்த செந்தமிழ்ப் பாடல்களை கொண்ட இச்சிறு புத்தகமானது நம் தமிழ் நாட்டில் யாவரும் வாங்கிப் படிக்கவேண்டிய வற்றுள் ஒன்றாகும். சிறு குழந்தைகள் கூட வாங்கி வாசித்து ஆனந்திக்கக் கூடியபடி இனிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இப் புத்தகத்தைப் பற்றி ஒரே குறைகூறக் கிடக்கின்றது. இவ்வழகிய பாடல்களை நல்லதாளில் அச்சிடாது, மிகவும் மட்டமான காகிதத்தில் அச்சிட்டிருப்பது சரியல்ல. மறுபதிப்பில் விலை கொஞ்சம் அதிகமாயினும் நல்ல காகிதத்தில் அச்சிடவேண்டும் என்பது எமது வேண்டுகோள்.

குறிப்பு—மொத்தமாக வாங்குவோருக்கு 100,க்கு 25 கமிஷன் கொடுக்கப் பெறுமாம். இம்மூன்று புத்தகங்களும் வேண்டுவோர் வைசியமித்திரனுபீஸ் மானேஜருக்கு எழுதிப்பெறலாம்.